"நானே (இயேசு) வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்"
(யோவான் 14 : 6)

SERVE SAVE SECURE
THE LIVING WAY MINISTRIES

# ஜீவ வழி

Tamil



ஆண்டு சந்தா ரூ 100/–

www.thelivingway.in

Vol. : 12 Issue : 30 ஜூலை 2020

## EDITORIAL BOARD

*Publication Director*
Pr. LIVINGSTON ZECHARIAH

*Chief Editor*
Sis. BINCY LIVINGSTON

*Team*
Pr. JOANSON ZAHARIYA
Pr. DANIEL P.S.
Pr. BIJU KOSHY
Bro. JOHN K. ALEXANDER
Bro. JOHN P. ANTONY
Bro. IMMANUEL MANI
Bro. BALASUNDARAM
Sis. MEENA AMUTHAN
Sis. SOPHIE VARUGHESE
Sis. SUSAN SARAH GEORGE
Sis. SHARINE J.

*Computer Designing*
ANON GRAPHIX
Chembur

*Printing*
BHANDUP OFFSET

*Publisher*
THE LIVING WAY MINISTRIES
Mumbai - 400 078.


## உள்ளே


மனந்திறந்து உங்களோடு.....................2
பரிபூரணம் .....................................4
வேத வினா....................................12
கவனத்தை கவரும் பெண்மணிகள்......13
ஜீவ வழி மிஷனெறி ஊழியங்கள் ........17
ஜெப வீரன் ஜார்ஜ் முல்லர்....................18



*Hear our new worship song*

**KALANGARAI VILAKKAAM**

YouTube

www.youtube.com/livingwayindia

**LIVINGWAY MEDIA**

**LIKE | SHARE | SUBSCRIBE**


### சிந்தனைக்கு

*"மரித்தோர் உள்ள நாட்டில் நாம் இருக்கிறோம். மரணமேயில்லாத நாட்டில் ஒரு நாள் இருப்போம்."*

- ஜான் நியூட்டன்

# மனந்திறந்து உங்களோடு.....



இந்த புது வருடத்தை நாமனைவரும் புன்சிரிப்போடுதான் வரவேற்றோம். பல விதமான எதிர்பார்ப்புகளையும், பல பல திட்டங்களையும் இருதயத்தில் பூப்போல மலர செய்து கொண்டு அது நிறைவேறிடவும் மகிழ்ச்சி காண வேண்டுமென்றும் ஆவல் கொண்டிருந்தோம். ஆனால் தேசத்தில் பிரச்சனைகள் ஒன்றின் பின் ஒன்றாக அரங்கேறிக்கொண்டிருப்பது, உலக இராஜ்யங்களை மட்டுமல்ல ஒவ்வொரு தனி நபருடைய வாழ்க்கையையும் இந்த வருடத்தின் பாதி வரையிலும் தகர்த்துப் போட்டுவிட்டது.

அமெரிக்காவின் ஆக்கிரமிப்பினால் ஈரான் நாட்டின் இராணுவ ஜெனரல் க்வாசம் சுலைமானியின் மரணமும், அதனை தொடர்ந்து உண்டான சம்பவங்கள் எல்லாம் மூன்றாம் உலக மகா யுத்தம் வந்து விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தி இருந்தன. மட்டுமல்ல, இந்திய தேசத்திலும் குடியுரிமை சட்ட பிரச்சனை இன்னொரு பெரும் பிரச்சனையாக மாறியிருந்தது. குடியுரிமை சட்டம் கொண்டு வர வேண்டும் என்று சொல்கிற ஒரு தரப்பினர் பிறப்பின் படி மட்டுமல்ல மதத்தின் பெயரையும் உட்படுத்தி தான் குடியுரிமை அளிக்கப்படவேண்டும் என்பதினால் ஏற்பட்ட போராட்டங்கள் ஏராளம். இவை எல்லாம் பத்திரிக்கை செய்தி மூலம் அறிந்திருக்கிறோம். மட்டுமல்லாது அனைத்து பொருட்களின் விலைவாசி உயர்வுகள் என இன்னும் பல பல சம்பவங்கள் இந்தவருடத்தில் நடந்தேறிவிட்டது.

இவைகளை எல்லாம் விட இன்று உலக இராஜ்யங்களை எல்லாம் தலை கீழாக்கிவிட்டதும், உலக நாடுகளின் தலைவர்களை எல்லாம் என்ன செய்வதென்றே தெரியாமல் பயந்து விழி பிதிங்கி நிற்கவும் செய்து, வாழ்க்கையின் பாதியிலேயே அநேகரை மண்ணோடு மண்ணாக்கிய கொரோனா அல்லது COVID - 19 என்ற கொள்ளை நோய் வில்லனாக வந்து இன்றும் மஹா தாண்டவம் ஆடிக்கொண்டிருக்கிறது. அதுவுமல்லாமல் அம்பன் மற்றும் நிசர்கா புயல்கள், வெட்டுக்கிளிகளின் வருகை, வெள்ளப்பெருக்கு அபாயம் போன்ற பயமுறுத்தல்களை எல்லாம் மனிதன் கண்டும் கேட்டும் மனம் மடிந்து நிலைகுலைந்து போயிருக்கிறான்.

இந்த ஆறு மாதங்களுக்குள் மனிதன் அநேக விஷயங்களை கற்றுக் கொண்டான் என்று தான் சொல்ல வேண்டும். மனித பலத்தால் எல்லாவற்றையும் அடைந்து விடலாம் என்ற எண்ணம் வீண் என்றும், பல நேரங்களில் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்றும் மருத்துவமனைகள் இருப்பதினால் மட்டும் வியாதிகளை எல்லாம்

சுகமாக்கிவிட முடியாது என்றும், இப்படி பலவிதங்களில் மனிதன் கற்றுக்கொண்டான். தேவாலயங்கள் மூடப்பட்டதினால் தொலைக்காட்சிகள் மற்றும் இணையதளங்கள் மூலம் வீடுகள் ஆலயங்களாக மாற தேவன் உதவி செய்தார். ஆன் லைன் மூலம் மற்றும் பல தரப்பட்ட தொலை தொடர்வு முறைகளில் தேவனை ஆராதிக்கவும் தேவ வார்த்தைகளை மிக எளிதாக எல்லா தேவ பிள்ளைகளுக்கும் சென்றடையவும் வழி ஏற்பட்டது.

மனுஷரை நம்புகிறதை பார்க்கிலும் கர்த்தர் பேரில் பற்றுதலாய் இருப்பதே நலம் என்று சங்கீதம் 118:8 சொல்கிறது. கர்த்தர் பேரில் பற்றுதலாய் இருப்பதே ஒரு மனிதனை நிலை நிறுத்துகிறது. மனிதன் பேரில் வைக்கும் நம்பிக்கை வீணாக இருக்கிறது. ஆனால் எந்த சூழ்நிலையிலும் நாம் கூப்பிடும் சத்தம் கேட்டு ஓடி வருகிற ஒரு மிக நல்ல சிநேகிதனாக நம் தேவன் கூட இருக்கிறார் என்ற உறுதிதான் ஒரு தேவ பிள்ளையை நிலைநிறுத்துகிறது. வியாதி படுக்கையில் வேதனை நேரங்களில், யாரும் உதவிக்கு இல்லாது சகாயமற்று நின்ற நேரங்களிலும், நம்மருகே வருபவரும், ஆலோசனை தருகிறவராகவும், தாங்குகிறவராகவும், நிழலாக கூட இருக்கிறவராகவும் நம் அருமை நாதர் நம்மோடு உண்டு. ஆகவே இன்று நாம் சந்தித்து கொண்டிருக்கிற இந்த மிக மோசமான கால சூழ்நிலையிலும் கர்த்தரை மட்டும் சார்ந்து இருப்போம். ஏனெனில் நமக்காக செயல்பட கர்த்தரின் வலது கரம் என்றும் உயர்ந்திருக்கிறது. அவரில் நம்பிக்கை வைக்கிற ஒருவரையும் அவர் கைவிடுவதில்லை, விட்டு விலகுவதுமில்லை.

ஜீவ வழி ஊழியங்களை கர்த்தர் இம்மட்டும் அற்புதமாக நடத்தி வருகிறதற்கு கர்த்தரை ஸ்தோத்திரிக்கிறேன். கர்த்தர் கடந்த பதினான்கு ஆண்டுகளாக இந்த ஊழியத்தை ஆசீர்வதித்து பதினைந்தாம் ஆண்டிற்குள் பிரவேசிக்க செய்திருக்கிற இந்த நல்ல தருணத்தில் ஊழியம் விரிவடைந்து முன்னேற நீங்கள் உங்கள் தனி ஜெபத்தில் ஜெபிப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். உங்களது விலையேற பெற்ற ஜெபங்களே இவ்வூழியத்தை வெற்றிப் பாதையில் நடத்தி கொண்டு வந்திருக்கிறது என்பதில் ஐயமில்லை. தொடர்ந்தும் ஜெபியுங்கள். உங்களுக்காக நானும் ஜெபித்து கொண்டிருக்கிறேன். கர்த்தர் தாமே நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவில் உங்கள் அன்பு சகோதரன்

***லிவிங்ஸ்டன் சகரியா***
மும்பை

+91 9324559533
pastorzlivingston@gmail.com

# பரிபூரணம்

**Pastor Livingston Zechariah**

**"இதோ நான் அவர்களுக்கு சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களை குணமாக்கி, அவர்களுக்கு பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்..."** (எரே. 33:6).

நம் தேவன் வாக்குத்தத்தம் செய்கிறவர் மட்டுமல்ல அதை செய்து முடிப்பதிலும் உண்மையும் உள்ளவர். வேதத்தை நாம் முழுவதும் வாசித்தால் கர்த்தர் நமக்கு அருளிய வாக்குத்தத்தங்களையும் அவைகளை அவர் தம்முடைய பக்தர்களுக்கு உண்மையாக நிறைவேற்றினதையும் காண முடிகிறது. பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கு கர்த்தர் எவ்விதம் செயல்பட்டாரோ அப்படியே இன்றைய பரிசுத்தவான்களுக்கும் தம்முடைய வாக்குத்தத்தங்களை உண்மையாய் செய்து நிறைவேற்றுவதற்கு கொஞ்சமும் மனமடிவு அடைவதில்லை. தேவ பிள்ளைகளாயிருக்கிற நாம் ஆராதிக்கிற கர்த்தர் யாரென்றும் அவர் நம் வாழ்வில் நிறைவேற்றி இருக்கிற வாக்குத்தத்தங்களின் ஆழமும், உயரமும், நீளமும், அகலமும் எவ்வளவு பெரிதாக இருக்கிறது என்கிற நிச்சயத்தையும் பெற்ற ஒவ்வொரு தேவ பிள்ளையும் தனக்கு வரும் எல்லா போராட்டங்களின் நடுவிலும் கர்த்தரை குறித்த அறிவு உள்ளவர்களாக இருக்க முடியும். பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் எல்லாரும் கர்த்தர் தமக்கு அருளின வாக்குத்தத்தத்தை முழுவதுமாக விசுவாசித்து அதை பெற்றுக் கொள்ளும்படி காத்திருந்தார்கள். அவர்களுடைய காத்திருக்குதல் தான் அவர்களை கர்த்தரோடு நெருங்கி சேரவும் செய்தது.

வாக்குத்தத்தங்கள் நிறைவேறாமல் இருப்பவர்களுக்கு ஒரு நற்செய்தி இருக்கலாம். வாக்குத்தத்தங்களை பெற்றுக்கொள்வோம் என்று காத்திருந்தும் பெற்றுக் கொள்ள முடியாமலேயே நாட்கள் கடந்து போயிற்றே என்ற ஏக்கம் காணப்படலாம். வாக்குப்பண்ணினவர் உண்மையுள்ளவர் என்று வேதம் நமக்கு கற்றுத்தருகிறது. நமக்கு வாக்குத்தத்தங்கள் சற்று தாமதிப்பது போல தோன்றினாலும் ஏற்ற காலத்தில் நிறைவேற்ற வல்லமையுள்ளவர்தான் நம்முடைய தேவன்.

பரிபூரணம் என்ற வார்த்தையை கேட்கவே நமக்கு எல்லோருக்கும் மிகுந்த சந்தோஷமுண்டு. இந்த வார்த்தைக்கு தாராளம், செழிப்பு, பெருக்கம், ஐசவரியம் என்றெல்லாம் பல அர்த்தங்கள் உண்டு. இந்த வார்த்தைகளுக்கு பின்னால் எல்லாம் ஒரு சந்தோஷம் ஒளிந்து இருப்பதை காணலாம். இது வெறும் உலக பிரகாரமாக மட்டுமல்ல தெய்வீகமும் சேர்ந்தே இருக்கிறது. ஏனென்றால் நம் கர்த்தராகிய இயேசு இந்த உலகத்தில் கடந்து வந்தது ஜீவன் உண்டாகி இருக்க

மட்டுமல்ல அதை பரிபூரணப்படுத்தவுமே வந்தார் (யோ 10:10) ஆகவே பரிபூரணம் என்று சொல்லும்போது நம்முடைய உலகப் பிரகாரமான வாழ்வின் நிலையில் மாத்திரம் என்று சிந்திக்க முடியாது. தேவ பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய வாழ்விலும், உலக வாழ்விலும் எல்லாப் பகுதிகளிலும் ஒரு பரிபூரணம் உண்டாகவேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

"இதோ நான் அவர்களுக்கு சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களை குணமாக்கி, அவர்களுக்கு பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்... (எரே. 33:6).

யூத ஜனங்கள் மிகவும் மோசமான கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருந்த போது, தன் ஜனத்திற்கு தீர்க்க தரிசன ஊழியத்திற்கென்று கர்த்தர் எரேமியாவை அழைத்த போது அவன் ஒரு சிறுவனாயிருந்தான். தீர்க்கதரிசியாக அழைக்கப்பட்ட போது யூதாவின் ஜனங்கள் விக்கிரக ஆராதனையிலும், துன்மார்க்கத்திலம் வாழ்ந்து கொண்டிருப்பதை கண்டு அவர்கள் எதிர்கொள்ளப் போகிற ஆபத்துகளில் இருந்து விடுதலை பெறவும், மனம் திரும்பி தேவனிடம் வரவும் அழைப்பு விடுக்கிறவனாக இருந்தான். பின்மாற்ற நிலையிலிருந்து திரும்பி வந்தால் கிடைக்கப் போகிற ஆசீர்வாதங்களைத் தான் நாம் மேலே வாசித்த வசனம் காண்பிக்கிறது. இந்த காலத்திலும் கர்த்தரையும் அவரது அன்பையும் விட்டு பின்மாறி அன்னியராகிப் போனவர்கள் அவரிடம் திரும்பி வந்தால் அவர்களை எரேமியா 33:6 வசனத்தின்படி கர்த்தர் பரிபூரண ஆசீர்வாதத்தினால் நிறைத்து ஆசீர்வதிப்பார்.

உங்களுக்கு இந்த வேத வசனத்தின் மூலம் கிடைக்கவுள்ள பரிபூரணத்தின் அடிப்படையில் இரண்டு விதமான ஆசீர்வாதங்களை விளக்கி காட்ட விரும்புகிறேன்.

1. உலகப் பிரகாரமான பரிபூரணம், 2. ஆவிக்குரிய பிரகாரமான பரிபூரணம்

ஒரு தேவ பிள்ளைக்கு தேவையான இந்த இரண்டு பரிபூரணங்களின் உறைவிடம் கர்த்தரிடத்தில் மட்டுமே உள்ளது. நம்முடைய ஆவிக்குரிய கண்களைத் திறந்து உன்னதத்தில் இருக்கிற பரிபூரணத்தின் துரவுகளைக் காண முடியுமானால் நாம் கர்த்தரோடு நெருங்கி வாழத்தயாராகிறோம் என்று அர்த்தம். இதை வாசித்துக் கொண்டிருக்கிற தேவ பிள்ளையே, பரிபூரண ஆசீர்வாதங்களை பெற விரும்புகிறாய் என்றால் ஒரே ஒரு வழிதான் உண்டு. அர்ப்பணிப்புடன் உங்கள் கண்களை உன்னத தேவனிடத்திற்கு உயர்த்துங்கள். அப்பொழுது இந்த எரேமியா 33:6 உங்கள் வாக்குத்தத்தமாக மாறும்

### 1. உலகப் பிரகாரமான பரிபூரணம்

ஒரு தேவ பிள்ளைக்கு உலகத்தில் கர்த்தர் தருகிற ஆசீர்வாதமே உலகப் பிரகாரமான பரிபூரணம். இந்த ஆசீர்வாதங்களை பல விதங்களில் நம் வாழ்வில்

தருகிறார். தேவன் முதலில் தன் படைப்பாகிய இயற்கையை ஆசீர்வதித்தார். (ஆதி. 1:22). மனிதனை ஆசீர்வதித்தார். (ஆதி 1:28). ஆபிரகாமை ஆசீர்வதித்தார். (ஆதி 12:2). தம்மை பின்பற்றின பக்தர்கள் எல்லோரையும் ஆசீர்வதித்தார். இந்த விதமான பரிபூரண ஆசீர்வாதங்கள் எல்லாம் ஆதி முதல் மனிதன் கர்த்தரிடத்தில் பெற்று வந்த ஆசீர்வாதங்கள்தான். கர்த்தர் மனிதனுக்கு செய்கிற இவற்றுக்கெல்லாம் மனிதனால் எதையும் திரும்ப செலுத்த முடியாது. ஆனால் கர்த்தர் நமது நன்றியுள்ள இருதயத்தையும், கர்த்தருக்கு உண்மையாகவும், அவரோடு உறுதியாகபற்றிக் கொண்டிருக்கிற மனதையும் காண்கிறவர். பரிபூரண ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்வதற்கு நம்முடைய கிரியைகள் மிக முதன்மையானதாக இருக்கிறது. ஏனெனில் நாம் பெறுகிற நன்மைகளுக்கு பின்னால் அநேக பரிசுத்தவான்களின் ஜெபமும் இருக்கிறது. பல பக்தர்கள் கர்த்தருடைய கரத்தில் ஆயுதமாக பயன்பட்டிருக்கிறார்கள். நாம் பரிபூரண ஆசீர்வாதங்களை பெற நாம் செய்ய வேண்டிய சில முக்கிய காரியங்களை இங்கே குறிப்பிடுகிறேன்.

### *அசாத்தியமானவைகளின் மத்தியில் சாத்தியத்தை கண்டடைதல்*

ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் அசாத்தியமானவைகளின் மத்தியில் சாத்தியக் கூறுகளை எவ்விதம் கண்டு அடைய முடிகிறது. அது ஒரு தேவ பிள்ளையால் மாத்திரமே முடியம். ஏனெனில் இரட்சிக்கப் படுவதற்கு முன் ஒருவர் பிசாசின் கரத்தில் இருக்கிற ஆயுதமாக இருப்பதால் அவன் பிசாசின் துர் ஆவியினால் நடத்தப்படுகிறான். ஆனால் இரட்சிக்கப்பட்ட பின் ஒருவர் நீதி நிறைந்தவராகிய கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுகிறார். அவர் ஆவியானவரால் அசாத்தியமான நேரங்களிலும் சாத்தியமானவைகளை கண்டடையமுடிகிறது.

இஸ்ரவேலர்கள் மீதியானியரால் மிக அதிகமான கஷ்டங்கள் அனுபவித்ததால் பயந்து கர்த்தரிடத்தில் முறையிட்டனர். கர்த்தர் தமது ஜனத்தின் கூக்குரலை கேட்டார். கர்த்தர் தம்முடைய கரத்தில் ஒரு ஆயுதமாக பயன்படுத்தத் தேடின போது அபியேஸ்ரியனான யோவாசின் மகனாகிய கிதியோன் கோதுமையின் விளைச்சலை மீதியானியரின் கைக்கு தப்புவிக்க ஆலைக்கு சமீபமாக போரடித்தான். அங்கே கர்த்தருடைய தூதனானவர் சென்று கிதியோனை அழைக்கிறார். (நியா 6:11) ஏழு ஆண்டுகளாக இஸ்ரவேல் மக்கள் மிதியானியரால் மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஆனால் எல்லோரும் நஷ்டப்பட்டு இருப்பதுபோல கிதியோனும் தன் வாழ்வில் நஷ்டப்பட்டு வாழ விரும்பவில்லை. மற்ற தன் ஜனத்தைவிடவும் ஒரு வித்தியாசமான சிந்தை நிறைந்து காணப்பட்டான். சாத்தியமே இல்லாத இடத்தில் கிதியோன் தன் எல்லா பிரச்சனைகளுக்கும் ஒரு விடுதலையையும் தீர்வையும் காணத் துவங்கினான். கிதியோன் பயத்தோடு தான் அங்கே இருக்கிறான். காரணம் அவன் மிதிப்பது கோதுமை, இருப்பதோ திராட்சை ஆலைக்கு அருகில், மட்டுமல்ல தன் உயிருக்கு

ஆபத்து நிறைந்த சூழ்நிலை, ஏனெனில் மீதியானியர் நிமித்தம் ஜனங்கள் கெபிகளிலும் குகைகளிலும் அடைக்கலமாக இருந்தார்கள். (நியா 6:1–6) இந்த கடின சூழ்நிலையில்தான் கிதியோன் சாதிக்க வேண்டும் என நினைத்தான். அன்பு தேவ பிள்ளையே, உன் வாழ்க்கை சாத்தானின் உபத்திரவத்தினால் தாங்க முடியாத துக்கத்தால் நிறைந்து வாழ்ந்து கொண்டிருக்கிற வாழ்க்கையாக இருக்கிறதா? உன்னை நெருக்குகிறவர்கள் நிமித்தம் ஓடி ஒளிந்து கொண்டிருக்கிறாயோ?சாத்தானின் பலவித தொந்தரவுகளால் வேலை ஸ்தலங்களிலும், குடும்ப வாழ்க்கையிலும் கஷ்டம் அனுபவித்து சோர்ந்து போயிருக்கிறாயோ? நீங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்தவைகளை மீதியானியரைப் போல செலவு செய்து அழித்துவிடுகிற பிள்ளைகளோ? அப்படியானால் அவற்றில் இருந்து ஒரு விடுதலையை பெற்று கொள்ள விரும்புகிறீர்களா? கிதியோன் ஒரு தீர்மானம் எடுத்தான். என் விளைவின் பலனை மீதியானியர் கையில் அகப்பட விடமாட்டேன். (நியா 6:11) வாழ்க்கையில் சவால்கள் இருந்தது ஆனால் உறுதியான அசைக்க முடியாத தீர்மானம் அவனிடம் இருந்தது.

கிதியோனுடைய இருதயத்தின் ஆழத்தில் இருந்த இந்த பராக்கிரமம் தான் கர்த்தருக்கு பிரியமாக இருந்தது. ஆகவேதான் கிதியோனே என்று அழைப்பதற்கு பதிலாக “பராக்கிரமசாலியே” என்று கர்த்தர் அழைத்தார். இந்த கிதியோன் என்கிற யெருபாகாலைக் கொண்டு தான் கர்த்தர் மீதியானியரின் கையில் இருந்து இஸ்ரவேல் ஜனத்தை இரட்சித்தார். இதனை வாசிக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரிரே சாத்தியமானவைகளை கண்டு பிடிக்கக் கூடிய பராக்கிரமம் உங்களுக்குள்ளேயே இருக்கிறது. அதை புறம்பான கண்களால் காண்பது அசாத்தியமாகவே இருக்கும். எல்லாம் வெறுமையாகி விட்டது என்றே தோன்றும். உங்கள் மனக்கண்கள் திறந்து பார்க்கும்போது அசாத்தியமானவைகளின் நடுவில் சாத்தியமானவைகள் ஒளிந்து இருப்பதை காண முடியும். ஆம் அதை உங்களில் இருந்து வெளிக் கொண்டு வாருங்கள். அதனால் உலகப் பிரகாரமான ஆசீர்வாதத்தின் பரிபூரணம் நாம் பெற்று அனுபவிக்க முடியும். வறட்சியில் இருந்து செழிப்பை காண்பீர்கள். எதிர்ப்புகளில் போராட்டங்களில் இருந்து அனுகூலமானதை காண்பீர்கள்.

**கர்த்தரை சோதித்து அறியுங்கள்**

உலகப் பிரகாரமான நன்மைகள் நாம் பெறுவது கர்த்தரின் மூலம் வருகிற ஆசீர்வாதமே என்றறிந்தோம். ஒரு தேவ பிள்ளைக்கு ஆசீர்வாதம் உண்டாயிருக்கும் பொருட்டு கர்த்தரை சோதித்து அறியுங்கள் என்று கர்த்தரே மல்கியா தீர்க்கதரிசி மூலம் உரைக்கிறார். (மல். 3:10) மட்டுமல்ல நீதிமொழிகள் 3:10ல் “உன் களஞ்சியங்கள் பூரணமாய் நிரம்பும். உன் ஆலைகளில் திராட்சை ரசம் புரண்டோடும் என்றெழுதப்பட்டிருக்கிறது. அதற்கு நாம் நீதி 3:9இல் சொல்லப்பட்டதை தான் 10ம் வசனம். இஸ்ரவேல் மக்கள் தங்களை

எகிப்திலிருந்து விடுவித்து தங்களுக்கு வாக்களித்த தேசத்தில் விளைந்த பலனை கர்த்தருக்கு கொடுத்தனர். (உபா 26: 1–10) கர்த்தர் தங்களுக்கு செய்த மீட்பின் கிரியைகளுக்கு ஈடாக கொடுக்க எதுவும் இல்லா போது தங்களின் விளைவின் முதற்பலனால் கர்த்தரை மகிமைப் படுத்த தீர்மானித்தனர். அது அவர்களுக்கு ஆசீர்வாதமாக இருந்தது.

நாம் கர்த்தருக்கு கொடுப்பது நம்முடையதில் இருந்து அல்ல கர்த்தர் கொடுத்ததில் இருந்து கொடுக்கிறோம் என்ற மனது இருக்க வேண்டும். ஏனெனில் நம்முடைய ஆரோக்கியம் கர்த்தரால் கிடைத்தது. இந்த எண்ணத்தோடு கொடுக்காவிட்டால் அது பலன் அற்றதாகும். அதற்கு பிரதிபலன் கிடைக்காது. கர்த்தருக்கு கொடுக்கிறதினால் குறைந்து போவோம் என்பதல்ல. அதன் மூலமாகவே கர்த்தர், நாம் சிந்திப்பதற்கும் நினைப்பதற்கும் அதிகமாக தருவதற்கு அவர் உண்மையுள்ளவர். இதை புரிந்து கொண்டு சிறியதாயினும், அதை முழு மனதோடு கர்த்தருக்கு பலியாக சமர்ப்பிக்கும் போது உன் களஞ்சியங்கள் பரிபூரணமாக நிரம்பும். உன் ஆலைகளில் திராட்சை ரசம் புரண்டோடும்.

கர்த்தருக்கு கொடுப்பதின் வழியாக கர்த்தரை கனப்படுத்துவதையும், அன்பு செலுத்துவதையும் குறித்து வேதபுத்தகத்தில் ஆழமாக சொல்லப்பட்டிருக்கிறது. “என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படி தசம பாகங்களையெல்லாம் பண்டகசாலையிலே கொண்டு வாருங்கள். நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமற்ப்போகுமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னை சோதித்து பாருங்கள் (மல் 3:10) இன்னும் சில வசனங்களையும் குறிப்பிடுகிறேன். வாசித்து தியானியுங்கள். (நீதி 11:24, 25, 19:17, 22:9, பிரசங்கி 11:1, 2, பிலி 4:19)

உலகப் பிரகாரமான ஆசீர்வாதம் கிடைக்க கர்த்தருக்கு கொடுப்பதில் குறைக்ககூடாது. மேலும் கர்த்தர் ஆபேலையும் அவன் காணிக்கையையும் அங்கீகரித்தார். (ஆதி 4:4) ஆனால் காயீனையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரிக்கவில்லை. கர்த்தர் நமது காணிக்கையை அங்கீகரிக்க வேண்டுமானால், அதன் மூலம் பரிபூரண ஆசீர்வாதம் உண்டாக வேண்டுமானால், முதலில் கர்த்தர் நம்மை அங்கீகரிக்கவேண்டும். அதன் பிறகுதான் நம்முடைய காணிக்கையை அங்கீகரிப்பார். ஆகவே கர்த்தருக்கு கொடுப்பது நல்லது அதைக்காட்டிலும் முதலில் கர்த்தருடன் சீர் பொருந்தினவர்களாக இருக்க வேண்டும்.

**2. ஆவிக்குரிய பிரகாரமான பரிபூரணம்**

உலகப் பிரகாரமான ஆசீர்வாதம் தேவனால் கிடைக்கிற நன்மை என்று சிந்தித்தது போலவெ ஆவிக்குரிய பிரகாரமாக பரிசுத்தம் ஆயத்தபடுகிறவர்களுக்கு தேவனால் கிடைக்கும் ஈவாக இருக்கிறது.

சங். 36:8ல் “உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தி அடைவார்கள். உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தை தீர்க்கிறீர்” என்று வாசிக்கிறோம். பரிசுத்தவான்கள் கூடி வருகிற இடமாகிய சபை தேவனுடைய ஆலயமானால் தேவ பிள்ளைகளுக்கு நல்ல திருப்தியான ஆகாரம் கிடைக்க வேண்டும். இன்று பல சபைகளிலும் ஆத்துமாக்கள் குறைந்து கொண்டே போகிறார்கள். ஆலயத்தில் திருப்தியான ஆகாரம் இல்லை. திருப்தி அடைய முடிவதில்லை. வார்த்தைகள் பயனற்றதாக உள்ளது. சுய புகழ்ச்சிக்கும், சுய மேன்மைக்கும் கை தட்டி வரவேற்கிறார்கள் அன்றி சபையின் நாயகனாம் இயேசுவிற்கு இடம் இல்லாமல் போய்விட்டது. இப்படிப்பட்ட ஆராதனைகளில் பங்கு பெறுகிற தேவ பிள்ளைகள் தினந்தோறும் ஆவியில் மெலிந்து போய்க் கொண்டே இருக்கிறார்கள். இதனால் பரிபூரணம் ஆத்மாவில் அடைய முடிவதில்லை. ஜெபமும், வசன தியானமும், அபிஷேகத்தில் நிறைவதிலும், ஆவிக்குரிய வரங்களிலும், பலன் கொடுக்கிற புஷ்டியான ஆலயம் தான் சரியான யதார்த்த சபை எனலாம். சங்கீதம் 42:1ல் சொல்லுகிறது போல நீரோடைகளை வாஞ்சித்து கதறி வருகிற மான்கள். அங்கே சந்தோஷத்தோடு தண்ணீர் குடித்து தன் தாகம் தீர்த்து கடந்து செல்கிறது. அதைப் போலவே பரிபூரண ஆனந்தம் கிடைக்க, கர்த்தருடைய பாதங்களில் நம்மை வாஞ்சையோடு அர்ப்பணிக்கவேண்டும். நம் தனிப்பட்ட ஜெபத்தினாலும் ஆராதனையினாலும் ஆனந்தத்தை கண்டு கொள்ள முடியும். ஆனால் தேவ பிள்ளைகளுடைய சபை கூடி வருதலின் மூலம் தான் பரிபூரண ஆனந்தத்தை பெற்றுக் கொள்ள முடியும். சபையிலே ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங்களை செய்யும் சக்தியும், வேறொருவனுக்கு தீர்க்க தரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவியைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்கு பற்பல பாஷைகளை பேசுதலும், வேறொவனுக்கு பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலும் ஆகிய பற்பல கிரியைகள் ஒரே ஆவியானவரால் எல்லாருக்கும் பரிபூரண ஆனந்தத்தை அனுபவிக்க முடிகிறது. ஆத்துமாவில் இருக்கிற பரிபூரணம் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் “சிலர் செய்கிறது போல சபை கூடி வருகுதலை விட்டு விடாதிருங்கள்” (எபி 10:24) என்று வசனம் நம்மை எச்சரிக்கிறது.

விசுவாச வாழ்க்கையின் வளர்ச்சியின் மிக முக்கியமாக காரியம் தான் சபை கூடி வருதல். எருசலேமில் ஆதி அப்போஸ்தலர்கள் தேவாலயத்தில் கூடி ஆராதிக்கும்போதே வீடுகளிலும் கூடி வந்து தேவனை ஆராதித்தார்கள். ஆகவே தான் வீடுகள் தோறும் அநேக சபைகள் உருவானது. (அப் 2:46, 47) அநேக பட்டணங்களிலும் சபைகள் உறுவானது. அப்படி விசுவாசிகறும் பெருகினார்கள்.

இன்றைக்கும் அநேக சபைகள் வளருவதற்குக் காரணம் இது தான். நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் ஆத்மீக பரிபூரணத்தை பெற்று அனுபவிக்க சபை மிகப் பெரும் பங்காற்றுகிறது. நாம் தேவ சமூகத்தில் இருக்கும்போது கர்த்தர் நம்மோடு பேசுகிற காரியங்கள் தேவ சபையில் கூடி வரும்போது உறுதிப்படுத்தப்படுகிறது. அப்பொழுது பெலவீனன் பெலன் பெறுகிறான். இளைப்படைந்தவர்கள் உற்சாகமும் பெறுகிறார்கள். இது ஒருவருக்கொருவர் ஐக்கியமாக இருக்கவும் ஆத்துமாவில் பரிபூரணம் அடையவும் ஏதுவாகிறது. தேவ சமூகத்தில் மட்டுமே நம் ஆத்துமாவில் ஆனந்தத்தை இந்த உலகத்தில் பெற்று அனுபவிக்க முடியும். அது வேறெங்கும் பெற்றுக் கொள்ள முடியாது. யோசுவா ஆசரிப்பு கூடாரத்தை விட்டு பிரியாது இருந்ததும், புதிய ஏற்பாட்டில் அன்னாள் தேவாலயத்தை விட்டு பிரியாது இருந்ததும், ஊழியம் செய்ததும் இந்த ஆனந்தத்தின் நிழலில் தான் என்பதில் சந்தேகமில்லை (யாத் 33:11, லூ 2:36, 37)

**பரிபூரண ஜீவன்**

திரு வசனத்தின் அடிப்படையில் பரிபூரண ஜீவன் ஒரு தேவ பிள்ளைக்கு தேவனால் அருளப்பட்ட மிகப் பெரிய ஈவாக இருக்கிறது. இதை பெற்றுக் கொள்ள முழுவதும் ஆவிக்குரிய வாழ்வு வாழ வேண்டியது கட்டளையாக இருக்கிறது. 3யோவான் 2ம் வசனத்தில், "உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாய் இருக்கவும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. பரிபூரண ஜீவனை தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஒருவனால் மட்டுமே சுகமாகவும் சுபமாகவும் வாழ முடியும். இந்த உலகில் அவர்கள் வாழ்விலும் பிரச்சனைகளும் போராட்டங்களும் உண்டு, ஆனால் அவர்கள் அதை ஜெயிக்கிறார்கள்.

யோவான் 10:10ல் இயேசு சொன்னார். நானோ அவர்களுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன். திருடன் ஜீவனை அபகரிக்கிறான். இயேசு ஜீவனைக் கொடுக்கிறார் (யோ 5:40, 6:68)இந்த நாட்களிலும் ஆத்மீக ஜீவனை அபகரிக்கிற அநேக திருடர்கள் சுற்றித் திரிகிறார்கள். ஆசீர்வாதம் என்றால் முழுமையும் உலகப் பிரகாரமானது தான் என்பதே அவர்களின் வாதம். ஆனால் நித்திய ஜீவனை விட எதுவும் பெரிதல்ல என ஒரு தேவ பிள்ளை நன்றாய் புரிந்து கொள்ள வேண்டும். நித்திய ஜீவனை தரவும் அதனை பரிபூரணமாக்கவுமே இயேசு வந்தார். இங்கே முதலில் குறிப்பிட்டது போலவே இந்த உலக வாழ்க்கைக்கு தேவையான எல்லா வித ஆசீர்வாதங்களும் அதனுள் அடங்கி இருக்கிறது. ஜனங்களுக்கு நித்திய ஜீவனை பரிபூரணமாக கொடுப்பதுதான் இயேசுவின் மிக பெரிய இலட்சியமாக இருந்தது. ஆகவேதான் யோவான் 9ம் அதிகாரத்தில் குருடனுக்கு பார்வையும், யோவான் 4ம் அதிகாரத்தில் சமாரியா ஸ்திரீக்கு இரட்சிப்பையும் தந்தார். அது போல வேதத்தில் அநேக சம்பவங்களிலும் நித்திய ஜீவனைக் கொடுப்பதையே இயேசு இலட்சியமாகக் கொண்டிருந்தார்.

இதை வாசித்துக் கொண்டிருக்கிற என் அருமை தேவ பிள்ளையே, உன் வாழ்க்கையில் கர்த்தர் தருகிற விடுதலைக்கும் சவுக்கியத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் அற்புதத்திற்கும் நன்மைகளுக்கும் பின்னால் ஆண்டவருக்கு ஒரே ஒரு இலட்சியம்தான் உண்டு அது உன்னில் ஜீவன் உண்டாக்குவதும், அதை பரிபூரணமுமாக்குகிதும் என்பதே. நாம் வெறும் உலக பிரகாரமான ஆசீர்வாதங்களுக்கு பின்னாக மட்டும் ஓட அல்ல, நித்தியம் தான் எல்லாவற்றுக்கும் அடிப்படை, நித்தியத்தை அளிக்கும்படியாகத்தான் ஏழு பிசாசு பிடித்திருந்த மகதலேனா மரியாளை விடுவித்தார். ஐந்து அப்பம் இரண்டு மீனைக் கொண்டு ஐயாயிரம் பேரை போஷித்ததை நாமறிவோம். இயேசு அவர்களுக்கு நித்திய ஜீவ வார்த்தைகளை போதித்தார். அதே சமயம் இந்த உலக வாழ்க்கைக்கு அவசியமான ஆகாரத்தையும் கொடுத்தார். ஆகாரம் கொடுப்பது மட்டும் அவரது இலட்சியமல்ல, நித்திய உபதேசங்களை கொடுப்பதே இலட்சியம். இந்த நித்திய ஜீவன் பரிபூரணமாக அளிக்கப்பட்டு இருக்கிறது. ஒரு மனிதனால் அல்ல, சர்வ உலகத்திற்கும் நாயகனாயிருக்கிற இயேசு ஆண்டவரிடத்தில் இருந்து அளிக்கப்பட்டிருக்கிற ஆத்மீக ஜீவனாக அது இருக்கிறது.

நமக்கு கர்த்தர் கொடுத்திருக்கிற இந்த பரிபூரண ஜீவனை நாம் பெற்றது மட்டுமல்லாமல் பிறருக்கும் அதனை நாம் கொடுத்திடவேண்டும். இதுவே கர்த்தரின் சித்தம். நீங்கள் பெற்றிருக்கிற ஜீவனை மற்றவர்களுக்கும் கொடுங்கள். இயேசு கிறிஸ்துவின் கிருபையின் நிறைவில் இருந்து தான் நாம் கிருபையின் மேல் கிருபை பெறுகிறோம். (யோ 1:16) இதை வாசித்துக் கொண்டிருக்கிற என் அருமை தேவ பிள்ளையே உன் வாழ்வில் பரிபூரண ஆசீர்வாதத்தை கர்த்தர் தர விரும்புகிறார். நீங்கள் உலக ஆசீர்வாதத்திற்காக ஓடி அலைய வேண்டுவதில்லை. அல்லாமல் ஆத்மீக பரிபூரணத்தை எதிர் நோக்கி தேவனிடத்தில் உள்ள ஆனந்தத்தை காணும் போது எல்லா ஆசீர்வாதங்களும் அதனோடே கிடைக்கும். ஆகவே நாம் சோர்ந்து போகாமல் கிரியை செய்யக் கூடிய சிந்தனையோடு, சாத்தியக் கூறுகளை கண்டு கொள்கிறவர்களாகவும், தேவனை சோதித்து அறிகிறவர்களாகவும் இருந்தால் உங்கள் வாழ்வில் பரிபூரணத்தை காணலாம். தேவனிடத்திலிருந்து கிடைக்கிற வியாதியில் விடுதலையும், ஆரோக்கியமும், சவுக்கியமும், சமாதானமும், சத்தியத்தினுடைய பரிபூரணமும் பெற்றுக் கொள்வதற்கு ஜெபத்திலும், உபவாசத்திலும், வசனத்தை தியானிப்பதிலும் நிலைத்து இருப்போம். முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூட கொடுக்கப்படும். (மத் 6:33) கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

**For your Offerings and Donations ......**
**The Living Way Ministries and Charitable Trust**
**A/c. No. 3506115727**
**(or) Livingston Zechariah A/c. No. 10870977445**
**State Bank of India, Bhandup Branch (0562), Mumbai.**
**IFS Code : SBIN0000562**

## வேத அறிவை பரிசோதியுங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 2 | | | 8 |
| | | 6 | 1 | |
| | | | | |
| 5 | | | | |
| | 7 | | | |
| | ■ | | ■ | |
| 4 | | | ■ | ■ |

### மேலிருந்து கீழ்

1. பேதுருவின் குற்றத்தை உணர்த்திய பறவை?
2. மோசேயின் தாயின் பெயர் ?
3. துக்கத்துடனே பெற்ற மகன் யார்?
5. வசனத்தை வாஞ்சையாய் ஏற்றுக்கொண்ட பட்டணம் எது?
6. யார் பாழாய் போன நிலங்களை அனுபவிப்பார்கள்?
8. பிள்ளைகள் எதைவிடாமல் பற்றிக்கொள்ள வேண்டும்?

### இடமிருந்து வலம்

2. சொப்பனக்காரன் யார்?
4. எபிரேயே மருத்துவச்சியின் பெயர் என்ன?
5. யாக்கோபு தேவனோடு பேசிய இடம்?
7. பதினாறு வயதில் யூதாவின் ராஜாவானவன் யார்?

### பதில்

| | | | | |
|---|---|---|---|---|
| 3 யா | 2 யோ | சே | ப் | 8 பு |
| பே | க | 6 ப | 1 சே | த் |
| ஸ் | பே | ர | வ | தி |
| 5 பெ | த் | தே | ல் | ம |
| ரோ | 7 உ | சி | யா | தி |
| யா | ■ | க | ■ | யை |
| 4 பூ | | ள் | ■ | ■ |

For the perfecting of the saints, for the work of the ministry. (Eph. 4:12)

# APOLLOS THEOLOGICAL COLLEGE

**(A wing of The Living Way Ministries, Mumbai. Regd. No. E-23448/2006)**

Post Box 17315, Bhandup (W), Mumbai-400 078.

*Affiliated with*

**NEW LIFE BIBLICAL SEMINARY, CHERUVAKKAL, AYOOR, KERALA.**

**Accredited by Asia Theological Association. (ATA)**

*Applications are Invited from born again committed men and women for the following courses*

| COURSES | DURATION | MEDIUM | ELIGIBILITY |
|---|---|---|---|
| Certificate in Theology (C.Th.)<br>Diploma in Theology (D.Th.)<br>Bachelor of Theology (B.Th.) | 1 Year<br>2 Years<br>3 Years | English/Hindi<br>„<br>„ | 10th Pass (or) Fail / 10th Pass / 12th Pass |
| Master of Divinity (M.Div.) (ATA) | 3 Years | English | B. Th. (or) Secular Degree (or) Mature Candidates (above 25 Years) |

M.Div. (ATA) is the External Programme

*Bible Based ★ Christ Centered ★ Ministry Oriented*

Attractive Fee Structure !

Admission Started !! Apply Immediately !!!

Classes Starts on June Second Week

*For Prospectus and Application Send Rs. 50/- by M.O. to :*

The Director

**APOLLOS THEOLOGICAL COLLEGE**

14/1, Sunita Estate, Shastri Nagar, Opp. Jainam Hall,

L.B.S. Marg, Bhandup (W), Mumbai - 400 078.

Mob. : 93245 59533 / 98676 34153

E-mail : apollos08@gmail.com

www.thelivingway.in

பெண்கள் பகுதி



# கவனத்தை கவரும் பெண்மணிகள்–18

**சகோதரி பின்ஸி லிவிங்ஸ்டன்**

தேவனுடைய திட்டத்தில் பெண்களுக்கான நிலைப்பாடு மிகவும் மேன்மை நிறைந்ததாகும். முதலில் மனிதனும் பின் மனிதனில் இருந்து மனுஷியும் சிருஷ்டிக்கப்பட்டார்கள். ஆனால் கிறிஸ்து இயேசுவில் இருவரும் சமமாகவே இருக்கிறார்கள். உலக மனித பார்வையில் ஒரு வேளை பெண் சாதாரணமாக காணப்படலாம். ஆனால் அவள் தேவனுடைய கரத்தில் ஒரு கருவியாக இருக்கிறாள் . அதே சமயம் குடும்பத்தின் வளர்ச்சிக்காகவும் செயல்படுகிறாள். அதிகமான பொறுப்புகளையும் தகுதிகளையும் தாங்கி நடப்பவள் பெண் என்பதை மறுத்து கூற முடியாது. காரணம் குடும்பம் என்ற மிகப்பெரிய சாம்ராஜ்யத்தை கட்டி எழுப்புவதிலும், ஒளியூட்டுவதிலும் அவளே சிறந்து விளங்குகிறாள்.

“கவனத்தை கவரும் பெண்மணிகள்” என்ற தலைப்பின் கீழ் இந்த மாதத்தில் நாம் லோத்தின் மனைவியை குறித்து சிந்திக்க இருக்கிறோம். வேத புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளவைகள் எல்லாம் ஏதொ வெறுமையாக எழுதி வைக்கப்படவில்லை. மாறாக தேவ பிள்ளைகள் எல்லோரும் எப்போதும் எந்த நேரத்திலும் வாசித்து கடைபிடிக்க வேண்டிய சத்தியம் நிறைந்த புத்தகம் தான் வேத புத்தகம். இந்த வசனங்களை மிக பக்தியுடன் அங்கீகரித்து கடைபிடிக்கிறவர்களுக்கு எப்போதும் ஆசீர்வாதமே. லோத்தின் மனைவியை குறித்தும் நாம் அவ்விதமாக கற்று கொள்ள வேண்டிய கதாபாத்திரமாக இருப்பதால் அது நமது வேத புத்தகத்தில் நமக்காக கொடுக்கப்பட்டுள்ளது. வேத புத்தகத்தில் பெயர் குறிப்பிடபடாதவர் சிலரே. அதற்கும் தேவனுக்கு ஒரு உத்தேசம் இருக்கிறது என்பதை அறிவோம்.

இந்த உலக வாழ்க்கையில் மனிதன் எப்படி வாழ வேண்டுமென்றும், எதிர்கால தரிசன பார்வை எப்படி இருக்க வேண்டும் என்றும், குடும்ப வாழ்க்கையிலும், குழந்தைகளை வளர்ப்பதிலும் நாம் கற்றுக்கொள்ள வேண்டியவைகள் என்றெல்லாம் அனேக மலை போன்ற சிந்தனைகளடங்கிய விஷயங்களை இந்த லோத்தின் மனைவியின் மூலம் நமக்கு வேதம் போதிக்கிறது. தனது துர்கிரியையால் தனது வாழ்க்கையை குறிப்பிடத் தக்கவளாக மாற்றி கொண்ட பெண் தான் லோத்தின் மனைவி.

கர்த்தர் ஆபிரகாமிடத்தில் சொன்னார். உன் தேசத்தையும் உன் ஜனத்தையும் விட்டு..... தேசத்துக்கு போ (ஆதி 12:1) ஆபிரகாம் தேவனுடைய வார்த்தையை கேட்டு கீழ்படிந்து கல்தேயா பட்டணத்தில் உள்ள ஊர் என்ற (இப்போதைய ஈராக் தேசம்) தேசத்திலிருந்து புறப்பட்ட போது ஆபிரகாமோடு கூட அவனது சகோதரன் மகனாகிய லோத்தும் புறப்பட்டான். இருவருக்கும் ஆடு மாடுகளும்,

வேலைக்காரர்களும், வேலைக்காரிகளும் இருந்தனர். இவர்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனைகளினால் இருவரும் பிரிந்து போக தீர்மானித்து பிரிந்தனர். அப்படியாக லோத்து யோர்தான் நதிக்கரையோரமுள்ள நல்ல நீர் செழிப்பான தேசமாகிய சோதோமுக்கு நேராக கூடாரத்தை போட்டான். (ஆதி 13:11) அங்கே லோத்துக்கு இரண்டு பெண் பிள்ளைகளும் பிறந்தார்கள். சோதோம் பட்டணத்தின் ஜனங்கள் பொல்லாதவர்களும், கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாக இருந்தனர். அந்த பட்டணத்தில் லோத்தும் குடும்பமும் அப்படியே தங்கி விட்டனர்.

**லோத்தின் மனைவிக்கு அங்கே என்ன நேர்ந்தது?**

**அதற்கான காரணங்கள் தான் என்ன?**

லோத்தின் மனைவி திரும்பி பார்த்து உப்புத் தூணாகி போனாள்.

**1. கீழ்படியாமை :**

கர்த்தர் கட்டளை கொடுத்திருந்தார். உன் ஜீவன் தப்ப ஓடிப் போ, பின்னிட்டு பாராதே, இந்த சமபூமியில் எங்கும் நிற்காதே (ஆதி 19:15) கீழ்படியாமை மிக சிறந்த உதாரணம் தான் லோத்தின் மனைவி. ஏனென்றால் தேசத்தில் நிறைந்திருக்கிற பாவத்தின் நிமித்தம் கர்த்தர் தேசத்தை அக்கினியால் நியாயத்தீர்க்க தீர்மானித்தார். லோத்து பட்டணத்தை விட்டு வெளியேறுவதற்காகவே காத்திருந்தார். இந்த காலத்தின் கட்டாயத்தை புரிந்து கொள்ளாமல் லோத்தின் குடும்பம் கால தாமதம் செய்து கொண்டிருக்க, தேவ தூதர்கள் அவனை துரிதப்படுத்தினார்கள். (ஆதி 19:15) தூதர்கள் லோத்தினிடத்தில் நீயும் உன் மனைவியும் பெண் பிள்ளைகளையும் சீக்கிரமாக பட்டணத்தைவிட்டு வெளியேறும்படி அவசரப்படுத்தினர். ஆப்ரகாமின் ஜெபத்தின் பதில்தான் இது. நம் தேவனுடைய அன்பின் ஐசுவரியத்தை நாம் அங்கே காண முடிகிறது. அங்கே நீதிமான் லோத்து மட்டுமே ஆனால் அவன் குடும்பத்தையும் இரட்சிக்க திட்டமிட்டிருக்கிறார். நம் வாழ்விலும் அவர் இன்றும் அப்படியே செய்கிறார் என்பதை மறந்து விடகூடாது. நம் குடும்பத்தில் உள்ள சிலருடைய கண்ணீரோபடு கூடிய ஜெபத்தால் தான் நாம் இன்றும் நிலை நிற்க முடிகிறது. அதற்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோமா?

கர்த்தர் சொன்னார், பின்னிட்டு பாராதே, ஓடிப்போ, ஆனால் லோத்தின் மனைவிக்கு ஓடிப்போக மனதில்லை. அவள் மனது, தான் சம்பாதித்த வஸ்திரங்கள் மற்றும் தட்டு முட்டுகள் எல்லாம் என்ன ஆனது என்று ஏங்க, விட்டு பிரிந்து போக மனமில்லாமல் திரும்பி பார்த்தாள், உப்புத்தூனாகி போனாள். கர்த்தரை நேசிக்க முடியாதபடி உன்னை பின்னுக்கு இழுக்கிற எந்த காரியமாகிலும் உன் வாழ்வில் இருக்குமேயானால், என் அன்பு சகோதர சகோதரியே, அவற்றை மறந்து விட்டு விடு, கலப்பையில் கை வைத்த பிறகு திரும்பி பார்க்கக் கூடாதே, அவளுடைய கீழ்படியாமை அவளுக்கு சாபமாகிப் போனது. என்னே பரிதாபம்.

**2. உலக சிந்தை :**

சாதாரணமாக பெண்கள் சகஜமாக பழகும் தன்மை கொண்டவர்கள். ஆகவே

அவர்கள் பழகும் நண்பர்களையும், கலாச்சார சூழ்நிலைகளையும் எளிதாக மறந்து வழ் முடிவதில்லை. அப்படியே லோத்தின் மனைவியும் அந்த தேச மக்களோடு மிகவும் நெருங்கி பழகி இருந்தாள். மிகவும் செழிப்பான தேசம், மிகுந்த நீர் வளம், திராட்சை தோட்டங்கள், ஆடு மாடுகள், மேய்ச்சல் நிலங்கள் என்று எல்லாவிதமான ஆசீர்வாதங்களும் நிறைந்த வாழ்க்கை!! சரி இதையெல்லாம் மறந்து விடலாம் என்று யோசிக்க கூட நேரம் இல்லாத நிலைமை.

அவளது இருதயம் பரலோகத்துக்குரியவைகளை காட்டிலும், தேவன் அளித்த வாக்குத்தத்தங்களை காட்டிலும் அழிந்து போகும் உலக காரியங்களால் நிறைந்திருந்தது. உலக சிநேகம் கர்த்தருக்கு விரோதமான பகையாக இருக்கிறது. ஆகவெ தான் அவள் தேவனுக்குரியவைகளை அங்கீகரிக்கவில்லை. தனது இரண்டு பெண் பிள்ளைகளுக்கும் சோதோமிலேயே மருமகன்களையும் தெரிந்து கொண்டாள். (ஆதி 19:14) மருமக்களுக்கும் தெய்வீக அறிவு இல்லாதவர்கள் என்பதை அறியலாம். நீங்கள் எழுந்து இந்த ஸ்தலத்தை விட்டு புறப்படுங்கள், கர்த்தர் இந்த பட்டணத்தை அழிக்கப்போகிறார் என்றது அவர்கள் பார்வைக்கு பரியாசமாக கண்டார்கள். (ஆதி 19:14) அவர்களும் அக்கினிக்கு இரையாகிப் போனார்கள்.

ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் இருக்கிற மற்ற எல்லா காரியங்களை விடவும் ஜீவன்தான் மிகவும் விலையேறப்பெற்றது என்பதை லோத்தின் மனைவி மறந்து போனாள். காரணம் இந்த உலகத்தின் ஆசீர்வாதங்களை தன் ஜீவனை விடவும் பெரிதாக எண்ணினாள். அவைகளை விட்டு விட மனதில்லாததினால் தான் அவள் திரும்பிப் பார்த்தாள். இன்றைக்கும் அநேகர் தன் சொந்த ஜீவனை விடவும் அதிகமாக உலக ஆசீர்வாதங்களை நோக்கியே ஒடுகிறார்கள். பலருக்கும் எப்படியாகிலும் நிறைய சம்பாதிக்கணும், சொத்து சேர்த்து விடனும் என்ற சிந்தையோடே வாழ்கிறார்கள். அதனால் தங்களது ஆயள் காலம் முழுதும் கஷ்டப்பட்டு சம்பாதித்து தன் பிள்ளைகளுக்கு வைக்கிறார்கள். பிள்ளைகள் அதன் அருமை அறியாமல் தவறான வழியில் செலவழித்து அழித்து விடுகிறார்கள். அமைதியாக இருந்து நன்றாய் சாப்பிடலாம் என்று நினைக்கும் போதோ வியாதி வந்து விட்டது. அனாவசியமான உலக சிநேகமும், அதிக ஆசையும் நம்முடைய சொந்த ஜீவனையே ஆபத்துக்குள்ளாக்கும் என்று லோத்தின் மனைவியின் வாழ்வு நமக்கு கற்றுத் தருகிறது. ஆகவே நமது ஜீவன் தான் மிக விலையேறப்பெற்றது. ஜீவனை இழந்து விடக் கூடாது. தேவனுடைய காரியங்களுக்கு முதலிடம் கொடுங்கள். தேவனிடத்தில் சேருங்கள். இந்த உலக சிநேகம் தேவனுடைய அன்பை மறைத்து விடுகிறதினால் தெய்வீக காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். ஐசவரியம் விருத்தியானால் இருதயத்தை அதன் மேல் வைக்காதேயுங்கள். (சங் 62:10)

### 3. தனக்குத்தானே அழிவை வருவித்துக்கொண்டது

அவள் தனக்கு தானே அனாவசியமாக அழிவை வர வழைத்துகொண்டாள். அவள் மட்டுமல்ல தனது இரண்டு பெண் பிள்ளைகளுடைய வாழ்வையும்

நாசமாக்கினாள் காரணம், அவளுடைய பெண் பிள்ளைகளின் இருதயம் சோதோமின் பாவத்தால் நிறைந்திருந்தது. அது அவர்களில் வெளிப்பட்டது. அவர்கள் மலையில்தங்கி இருந்த போத லோத்தின் மனைவி இருந்திருந்தால் இந்த பாவம் அங்கே நடந்திருக்காது. சோதோமின் பாவம் என்று சொல்லப்படுகிற பாவமாகிற விபச்சாரத்தை பெண் பிள்ளைகள் தன் தகப்பனோடு செய்தார்கள். தான் அறியாமலேயே லோத்தும் பாவம் செய்தான் (ஆதி 19:33–38). இதற்கு லோத்தின் மனைவியே காரணம். ஒரு தாயாக இருக்க வேண்டிய பெண் தன் நிலையில் இல்லாவிட்டால் பிள்ளைகள் பாவம் செய்ய நேரிடும்.

இதை வாசித்துக் கொண்டிருக்கிற என் அருமை தாயே, சகோதரியே லோத்தின் மனைவியின் சரித்திரம் இப்படியென்றால் நாம் எந்த நிலையில் இருக்கிறோம்? நம் பிள்ளைகளுக்கு முன்பாக நாம் முன் மாதிரியுள்ளவர்களாக வாழ்கிறோமா? நம் பிள்ளைகள் சந்தர்ப்பம் கிடைக்கும் போது பாவம் செய்ய நினைக்கிறார்களா? தேவ சமூகத்தில் முழங்கால் படியிட தயாராக இருக்கிறீர்களா? வீணாக நேரம் செலவழிப்பதற்கும், உலக பத்திரிக்கைகள் வாசிப்பதற்கும், தொலைக்காட்சிக்கும் நேரத்தை வீணடிக்கிறீர்களா? ஜாக்கிரதை!! நாம் அழிந்து போவதற்றும் நம் பிள்ளைகளையும் கெடுப்பதற்கும் ஏதுவாகிவிடும். இனியும் நமக்குள்ள காலங்களையாகிலும் தேவ பயபக்தியோடு வாழ ஒப்புக்கொடுத்தால் உங்களை இரட்சித்து கொள்ள முடியும். ஆம் நம்மை நாமே அழித்துக் கொள்ள கூடாதே.

சோதோமின் பாவமும் ஆடம்பரமும் ஐசுவரியங்களும் நம்மை தேவனிடத்தில் இருந்து பிரிப்பதற்கும் நம்மை அழிவுக்கு நேராக நடத்தவுமே அல்லாமல் வேறொன்றுக்கும் உதவாது. ஒரு தேவ பிள்ளைக்கு ஆசீர்வாத செழிப்பு ஏற்படுவதில் தவறில்லை. குடும்பம் அழிந்து போகிறதற்கு காரணம் ஆகிவிட அனுமதிக்கக்கூடாது. லோத்தினுடைய கால்கள் முன்னேறி ஓடிப்போகும்போது மனைவியினுடைய கால்களோ சோதோமிலேயே நின்று விட்டிருந்தது. உலகம் விரைவாக ஓடிக்கொண்டிருக்கிறது. உலக சிநேகத்தில் நமது கால்கள் சிக்கி இடறிப் போய்விட அனுமதிக்கக் கூடாது.

தேவனால் கவனத்தை ஈர்க்கப்பட வேண்டும் என விரும்பும் என் அன்பு சகோதரியே! யோர்தான் நதியுடைய தென் மேற்கு பகுதியில் சோதோமின் மலைகள் இருக்குமிடங்களில் உப்புக் குன்றுகளை நாமின்றும் பார்க்க முடியும். இன்றும் அவற்றை அரேபியர்கள் லோத்தின் மனைவி என்றே அழைக்கிறார்கள். உங்களை பார்த்து இந்த உலகம் என்னவென்று அழைக்கப் போகிறது? கவனிக்கப்படும்படி நாம் செயல்படவேண்டாமா? நற்செயல்களால் நாம் கவனிக்கப்படவேண்டும். லோத்தின் மனைவியின் வாழ்வு நமக்கு ஒரு முன் எச்சரிக்கையாக இருக்கிறது. கீழ்படிதலோடு, உலக சிநேகத்தை வெறுத்து, சுயமாக கெட்டு அழிந்து போகாமல், கீழ்படிதலுள்ளவர்களாய், தேவனுடைய அன்பில் நிறைந்து, நம்முடைய இரட்சிப்பைக் காத்து கொண்டும், அழிந்து போகிறவர்களுடைய விடுதலைக்காகவும் கர்த்தருடைய கற்பனைகளை அனுசரித்து முன்னேறி ஓடுவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ASSEMBLIES OF GOD
ALL THE GOSPEL
AG

We Prayerfully Invite You & Your Family
To Join Our Congregation

LIVING WAY A.G. CHURCH

14/1, Sunita Estate, Shastri Nagar, Opp. Jainan Hall,
L.B.S. Marg, Bhandup (W), Mumbai - 400 078.
Mob : 93245 59533 / 98676 34153

Worship Timings Every Sunday
8.30 am to 10.30 am - Malayalam & Hindi
10.30 am to 12.30 pm - Tamil & Hindi
5.30 pm to 7.30 pm - Hindi & English

# ஜீவ வழி மிஷனெறி ஊழியங்கள்

இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு தேவ பிள்ளைகளிடத்திலும் கர்த்தர் எதிர்பார்க்கிற ஒரு விஷயம்தான் சுவிசேக்ஷம் அறிவித்தல் என்பது. சுவிசேஷ ஊழியம் செய்ய மனதில்லாதவர்கள் தங்களுக்குள்ளே ஜீவனற்றவர்களாய் இருக்கிறார்கள். எப்படிப்பட்ட பிரச்சனைகள் மோதி அடித்தாலும், எவ்வளவுதான் நிந்திக்கப் பட்டாலும், கஷ்டங்கள் அனுபவிக்க நேர்ந்தாலும் தன் மரணம் வரையிலும் அல்லது ஆண்டவர் வருகை வரையிலும் தொடர்ந்து செய்கிற ஒரு வேலை தான் கர்த்தருடைய ஊழியம். ஏனெனில் கர்த்தருடைய அன்பு நம்மை நெருக்கி ஏவிக் கொண்டிருக்கிறது. **(2கொரி 5:14)** ஒன்று நாம் போக வேண்டும் அல்லது நாம் அனுப்ப வேண்டும். காரணம் இன்னும் சுவிசேஷம் அறிவிக்கப்படாத அநேக இடங்களுக்கு அநேக தேவ பிள்ளைகள் கடந்து சென்று சுவிசேஷம் அறிவிக்கிறார்கள். அவ்விதம் ஊழியம் செய்கிறவர்களுக்காக ஜெபிக்க இரட்சிக்கப்பட்ட் நாம் கடமை பட்டிருக்கிறோம். அநேக கிராமங்களில் இயேசு யாரென்று இன்னும் அறியாது இருக்கிறார்கள். இரட்சகர் இயேசு கல்வாரி சிலுவையில் பலியானதின் மூலம் கிடைத்த இரட்சிப்பை அனுபவிக்க முடியாதம அநேகர் இன்றும் காணப்படுகிறார்கள் என்று ஜெபிக்கிற ஒவ்வொரு தேவ பிள்ளையும் அறிந்திருக்க வேண்டும். உங்களது தொடர்ச்சியான ஜெபங்களை மிஷனரி ஊழியங்கள் என்றும் எதிர்பார்க்கிறார்கள். ஏனெனில் ஜெபமே இந்த மிஷனரி ஊழியங்களை நிலை நிறுத்துகிறது.

நம்முடைய மிஷனரி ஊழியங்களையும் கர்த்தர் வளர செய்கிறார். இராஜஸ்தானில் நடைபெற்று வருகிற தையல் பயிற்சி பள்ளியின் ஏழாவது வகுப்புகள் துவக்கி நடத்த கர்த்தருக்குள் ஆசிக்கிறோம். மற்றும் குஜராத்தில் சூரத் மாவட்டத்தில் உள்ள கிராம பகுதிகளில் பசெவா எனப்படுகிற ஆதிவாசிகள் மத்தியில் ஊழியம் செய்ய நினைத்து ஜெபித்துக் கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டில் வேலூர் மாவட்டத்தில் உள்ள பிராமணமங்கலம் கிராமத்தில் நடைபெற்று வரும் ஊழியங்களை கர்த்தர் மிகவும் ஆசீர்வதித்து வருகிறார். மும்பை ஊழியங்களையும், தானே ஊழியங்களையும் ராய்காட் மாவட்டத்தில் நடக்கிற ஊழியங்களையும் ஆசீர்வாதமாக கர்த்தர் நடத்துகிறார். கர்த்தர் இம்மட்டும் ஊழியங்களை ஆசீர்வதித்து வளரச் செய்கிறார். மகாராஷ்ட்ராவில் உள்ள **36** மாவட்டத்திலும் ஒவ்வொரு சபையாவது நிறுவ வேண்டும் என்பது ஜீவ வழி ஊழியங்களின் பிரதான இலட்சியங்களில் ஒன்றாகும். இந்த இலட்சியத்துடன் செயல்பட்டு வருகிறோம். ஆகவே இனி வெளி வருகிற ஒவ்வொரு இதழிலும் மகாராஷ்ட்ரா மாநிலத்தின் வரைபடமும் அதன் விபரங்களும் இணைக்கப்படும் இதனை வைத்து நம் ஜெப பங்காளர்கள் ஜெபத்தில் தாங்கவும் மட்டுமன்றி மகாராஷ்ட்ராவின் கிராமங்களுக்குச் சென்று தங்கி மிஷனரி ஊழியம் செய்ய விரும்புவோர் எங்களை தொடர்பு கொள்ளுங்கள். அது மட்டுமல்லாமல் இந்த ஊழியத்தின் வளர்ச்சிக்காகவும், அதன் தேவைகளுக்காகவும் மனப்பூர்வமாக கொடுத்து உதவிட உங்களை உற்சாகப்படுத்துகிறோம். உதவுவீர்கள் என்று கர்த்தருக்குள் நம்புகிறோம். தொடர்ந்து ஜெபித்துக் கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை அபரிமிதமாக ஆசீர்வதிப்பாராக!



# ஜெப வீரன் ஜார்ஜ் முல்லர்

Pr. Joanson Zahariya, Chennai

இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது. (மத் 4:15) இந்த நித்திய வெளிச்சமாய் வெளிப்பட்டவர்தான் நம்முடைய ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து. நம்மில் இருக்கும் இருளை அகற்றி வாழ்வைப் பிரகாசிக்கப் பிறந்த நித்திய வெளிச்சம். நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். என்னை பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான் (யோனான் 8:12) என்று இயேசு கூறினார். இயேசுக் கிறிஸ்து வெளிச்சமாயிருப்பதால் இவ்வுலக மக்கள் வெளிச்சத்தில் நடக்கவேண்டும் என்று அவர் விரும்பினார். எனவே பாவ அந்தகாரத்தில் வாழ்ந்திருந்த மனிதனை இரட்சிக்கும்படியாக வெளிச்சமாக இயேசு இந்த உலகத்தில் அவதரித்தார். இயேசு இவ்வுலகிலிருக்கையில் தம்மோடு கூட இருக்கவும், பிரசங்கம் பண்ணும்படியாகவும் சீஷர்களைத் தெரிந்தெடுத்தார். அநேக அற்புத அடையாளங்களைச் செய்தார். பிசாசினால் ஏவப்பட்டு யூதர்கள் இயேசுவைச் சிலுவையிலறைந்தார்கள். இவைகளெல்லாம் தேவ வாக்கியங்களின் நிறைவேறுதலாக சம்பவித்தன. ஆனால் யூதர்களை மட்டுமல்ல உலக மக்கள் அனைவரும் ஆச்சரியப்படும் வகையில் இயேசு மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தார். அவர் இன்றைக்கும் ஜீவிக்கிறார். அந்த ஆண்டவர் தன்னை விசுவாசிக்கிறவர்களுக்கு ஒரு கட்டளையைக் கொடுத்தார். ஆகையால் நீங்கள் புறப்பட்டு.... .சீஷராக்குங்கள் (மத் 28:20) இந்த சீஷத்துவத்தை ஏற்றுக்கொண்ட ஒவ்வொரு நபரும் இந்த கட்டளைக்கு கீழ்படிந்துதான் ஆகவேண்டும்.

இந்த கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவர்கள் புறப்பட்டாகவேண்டும். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட அநேகர் இக்கட்டளைப்படி அங்கும் இங்கும் சுற்றித் திரிந்து அநேகரை கிறிஸ்துவின் சீஷர்களாக்கிக் கொண்டிருக்கின்றனர். அவ்வண்ணமே உலகமெங்குமுள்ள கிறிஸ்தவ சபை சரித்திரத்தில் ஜெப வீரனாக முத்தைப் பதித்த ஒரு விசுவாச வீரன்தான் ஜார்ஜ் முல்லர்.

***பிறப்பும், வாலிபமும் :***

1805 செப்டம்பர் 27-ல் ஜெர்மனியில் பிரஷ்யா குரோப்பென்ஸ்டட் (**Kroppenstaedt, Kingdom of Prussia**) என்ற நகரத்தில் பிறந்தார். முள்ளர் ஒரு சாதாரணமான குடும்பத்தில் பிறந்தார். வாலிப நாட்களில் கர்த்தருக்குப் பயப்படுகின்ற பயமின்றி வாழ்ந்தார். தன்னுடைய தகப்பனால் சகோதரர்களைவிட அதிகமாக நேசிக்கப்பட்டார் கெட்ட நண்பர்களும் இவருக்கு அதிகமாகவே காணப்பட்டனர். சீட்டு விளையாடுவதில் அதிக நாட்டமுடையவராய் இருந்ததால் நண்பர்களும் சமயத்தை வீணடித்தார். குடிப்பழக்கமுடையவராய் இருந்ததால் குடித்து வெறித்து தெருக்களில் அலைந்து திரிந்தார். அவ்வாறு முல்லர் ஒரு துன்மார்க்க வாழ்க்கை வாழ்ந்து வந்தார். நாவல் வாசிப்பதில் அதிக ஆர்வம் காட்டினார். தகப்பனின் செல்லப் பிள்ளையாக இருந்ததால் தகப்பனிடத்திலிருந்து கிடைத்த பணம் முழுவதையும் துஷ்பிரயோகம் செய்தார். இவ்விதமாக வாலிபம் பருவம் முழுவதையும் சாத்தானின் அடிமைத்தனத்தில் கழிக்க வேண்டி வந்தது.

குடிப்பழக்கத்திற்கும், துன்மார்க்க வாழ்க்கையில் அதிகமாக பணத்தை செலவழித்தார். பணம் கிடைக்காமல் இருக்கும்போது மற்றவர்களை ஏமாற்றுவதற்கும்

இவர் எந்தத் தயக்கமும் காட்டவில்லை. கடன் வாங்குதல் என்பது இவரது வழக்கமாயிருந்தது. திரும்பக் கொடுப்பது என்ற பழக்கமே இவருக்கு இல்லை. உணவு சாலைகளில் சென்று சாப்பிட்டு விட்டு பணம் கொடுக்காமல் தப்பிவிடுவது மட்டுமல்ல, வாடகை கொடுக்காமல் ஓடி விடுவதும் பழக்கமாயிருந்தது. தகப்பனிடத்திலிருந்து கிடைக்கிற பணத்தை தன்னுடைய ஷூ (Shoe) க்களுக்கு அடியில் மறைத்துக்கொள்வார். முல்லரின் நண்பர்கள் கொடுங் குடிகாரர்களாயிருந்தனர். நெறியற்ற வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என பல முறை ஆசித்தாலும் அது பெரிய பயனழிக்கவில்லை.

***தாயின் இறப்பு:***

முல்லரின் 15வது வயதில் அதாவது 1820-ம் ஆண்டு அவரது தாயார் மரணமடைந்தார். ஆனால் அவரது தாயாரின் மரணம் முல்லரை சற்றும் பாதிக்கவில்லை. தாயாரின் மரணத்தைவிட நண்பர்களுடன் உல்லாசமாய்த் திரிவதில் முல்லர் திருப்தியைக் கண்டார். இடையிடையே மனந்திரும்புதல் உண்டானதெனிலும் இயேசுவின் ஆழமான அன்பை இருதயத்தின் ஆழத்தில் அவர் ருசிக்கவில்லை. ஆலயத்தில் செலுத்தவேண்டிய பணத்தைக் கூடதிருடி அதையும் ஊதாரித்தனமாக செலவிட்டார். தாயின் மரணத்திற்கு பின்பும் வாழ்க்கையில் எந்த மாற்றமும் இல்லாமல் பாவத்திற்கு தன்னை முற்றுமாக அடிமையாக்கியிருந்தார்.

***ஆரம்ப வாழ்க்கையின் விளைவு:***

தாயின் மரணத்திற்கு பின் 1821-ல் தன்னுடைய பதினைந்தாவது வயதில் தனது நண்பர்களுடன் சுற்றித்திரிந்து உல்லாசித்துக் கொண்டிருந்தார். வீர சாகசக் கதைகளைச் சொல்லி நம்ப வைப்பதில் திறமை வாய்ந்தவராயிருந்தார். ஆடம்பர வாழ்க்கையில் ஈர்க்கப்பட்ட முல்லர் தங்கும் விடுதிகளில் வாடகைக்குத் தங்கினார். ஆனால் பல நேரங்களிலும் பணம் கொடுக்காமல் தப்பி விடுவதுதான் பழக்கம். அன்னுளுக்கு எப்பொழுதும் போல பணம் கொடுக்காமல் ஜன்னல் வழியாக தப்ப முயற்சிக்கும் பொழுது காவலாளியின் கையில் பிடிபட்டு சிறையில் அடைக்கப்பட்டார். வாலிபனாய் இருந்த பொழுதே ஒரு மாதம் சிறையிலிருந்தார். ஆனால் அவருடைய தகப்பனார் அவரை சிறையிலிருந்து மீட்டார். மிகவும் கடினமான சிறைவாசமாயிருந்தது என முல்லர் பின்னர் அதைப்பற்றி கூறியிருக்கிறார்.

***வாசிக்கும் பழக்கமுடையவர்:***

மிகவும் துன்மார்க்கமான வாழ்க்கை வாழ்ந்தாலும் புஸ்தகங்களை வாசிக்கும் பழக்கமுடையவராய் இருந்தார். வாசிக்கும் பழக்கம் அவரது அறிவுத்திறனைப் பெருக்கியது. அக்காலத்திலேயே தான் வாசிப்பதற்காக 300 புஸ்தகங்களை வைத்திருந்தார். எனினும் வேதாகமத்தை வாசிப்பதில் அவருக்கு விரும்பமிருக்கவில்லை மகனின் துன்மார்க்கத்தை மாற்றுவதற்காக அவரது தகப்பனான் முல்லரை ஒரு போதகரான டாக்டர் நாகல் என்பவருடன் தங்க வைத்தார். ஆனால் முல்லர் அங்கிருந்து ‘ஹாலே’ என்ற பிரசித்தி பெற்ற கல்லூரியில் படிப்பதற்காகக் போய்விட்டார். அங்கே சென்ற முல்லர் வாசிக்கும் பழக்கத்துடன் விளையாட்டுத்துறையிலும் ஆர்வமுடையவரானார். மட்டுமல்லாது லத்தீன், பிரன்ச், ஜெர்மன், ஆங்கிலம், எபிரெயு, கிரேக்கு என்ற இந்த மொழிகளையும் கற்றுக் கொண்டு அறிவைப் பெருக்கி தீபமாகத் திகழ்ந்தார். அந்த வெளிச்சம் பிரகாசிக்கத் துவங்கினது......

(தொடரும்)

www.thelivingway.in

YouTube : www.youtube.com/livingwayindia

இதோ நான் அவர்களுக்குச் சவுக்கியமும்
ஆரோக்கியமும் வரப்பண்ணி,
அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்குப்
பரிபூரண சமாதானத்தையும்
சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்.
(எரேமியா 33:6)

www.thelivingway.in

**PRINTED MATTER**
(Private Circulation only)

**To,**

*If Undelivered Please return to :*
**"JEEVA VAZHI"**
**Post Box : 17315, Bhandup (W), Mumbai - 400 078.**
**Maharashtra, INDIA**

**Edited & Published by : Pr. LIVINGSTON ZECHARIAH, on behalf of The Living Way Ministires, Mumbai - 400 078.**